சமூக சேவைகள் அமைச்சின் சுற்றுநிரூபம் 1/2015

மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
.......................................................

**<u>2015 பாதீட்டுப் பிரேரணையின் பிரகாரம் கடுமையாகச் சிறுநீரக நோயினாற் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவினை வழங்குதல்</u>.**

2015 பாதீட்டுப் பிரேரணையின் பிரகாரம் மேற்குறிப்பிட்ட சிறுநீரக நோயாளர்களுக்கு 2015 ஜனவரி மாதத்திலிருந்து நோயாளி ஒருவருக்கு தலா ரூபா. 3000/- வீதம் வழங்குவதற்கு அரசினாற் தீர்மானமெடுக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவினை அமுற்படுத்தும் முறைமை.

1. மாதாந்தம் ரூபா. 3000/- ஐ விடக் குறைந்த வருமானம் பெறும் குடும்ப அங்கத்தவர் நீண்டகாலமாகச் சிறுநீரக நோய்க்கு ஆளாகியுள்ளாராயின் அவர் மாத்திரமே இக் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்வதற்குத் தகைமையினைக் கொண்டவராக இருத்தல்.

2. அதன் பிரகாரம் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவம் (இணைப்பு இலக்கம் 1) மற்றும் மருத்துவ அறிக்கை (இணைப்பு இலக்கம் 2) ஆகியவற்றைப் பூர்த்தி செய்து முன்வைத்தல் வேண்டும். *

3. உரிய ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுத் தங்களுக்கு இவ்வமைச்சினால் அனுப்பப்படும். ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் கட்டுநிதியினைத் திறைசேரியிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். பிரதேச செயலாளரினாற் பரிந்துரை செய்யப்பட்டு இவ்வமைச்சுக்கு முன்வைக்கப்பட்டு அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்ட நோயாளர்களின் பெயர்ப் பதிவேட்டிற் குறிப்பிடப்பட்ட நோயாளர்களுக்கு மாத்திரமே கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும் (இணைப்பு இலக்கம் 3) **

4. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தனிப்பட்ட முறையிற் சமுகமளித்துக் கொடுப்பனவினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அவருக்குச் சமுகமளிக்க முடியாத சந்தர்ப்பங்களிற், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் நெருங்கிய உறவினர் ஒருவருக்கு மாத்திரமே பணத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக (இணைப்பு இலக்கம் 4) ஐ உபயோகித்தல் வேண்டும்.

5. இக் கொடுப்பனவு மாதாந்தக் கொடுப்பனவு ஆதலால், ஒவ்வொரு மாதமும் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் 10 ஆந் திகதி அல்லது அத்தினம் விடுமுறை தினமாயின் அடுத்து வரும் முதலாவது கடமை தினத்திற் கொடுப்பனவு இடம்பெறுதல் வேண்டும். கொடுப்பனவுப் பதிவேட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை உரிய மாதத்தின் 30 ஆந் திகதிக்கு முன்னர் இவ்வமைச்சுக்கு முன்வைத்தல் வேண்டும்.

6. கொடுப்பனவுப் பயனாளி தங்கள் பிரதேச செயலகப் பிரிவிலிருந்து விலகி வேறொரு இடத்தில் வசிப்பாராயின் அல்லது மரணித்திருப்பின் விரைவிற் கொடுப்பனவு நிறுத்தப்படல் வேண்டும்.


* கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட வேண்டிய 2015 ஜனவரி மாதம் தொடர்பாக இணைப்பு 1 மற்றும் இணைப்பு 2 அவசியமில்லை. சுகாதார அமைச்சிற் பதிவு செய்து சிகிச்சையினைப் பெற்று வரும் நோயாளர்களுக்கு 2015 ஜனவரி முதலாவது வாரத்திற் கொடுப்பனவினைச் செய்தல் வேண்டும். 2015 பெப்ரவரி மாதத்திலிருந்து கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது இணைப்பு 1 மற்றும் 2 இனைப் பூர்த்திசெய்து பெற்றுக் கொள்வது கட்டாயமானதாகும்.

** இது 2015 ஜனவரி மாதக் கொடுப்பனவுக்கு உரித்தன்று.

7. கொடுப்பனவுப் பதிவேட்டுக்குப் புதிய ஒருவரை உள்ளடக்கும் அனைத்து வேளைகளிலும் இணைப்பு 5 இன் ஊடாக அதனை அமைச்சுக்கு அறிவித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் புதிய பிரவேசங்களுக்குப் புதிய தொடர் இலக்கம் ஒன்றை வழங்கப்படுதலும் வேண்டும். (தரவுகளை இலகுவாக்கும் பொருட்டு)

8. கொடுப்பனவினை மேற்கொண்ட உறுதிச்சீட்டுக்களின் மூலப் பிரதிகளைத் தங்கள் அலுவலகத்திற் கோவைப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். இவ் வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குப் பிரதேச செயலாளர்கள், சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள், சமூக அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உதவி அத்தியாவசியமாவதுடன், இது தொடர்பாக மேலதிக தகவல்களை, அவசியமேற்படின் சமூக சேவைகள் அமைச்சின் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

| | | | |
|---|---|---|---|
| தொலைபேசி இலக்கம் | - | பணிப்பாளர் | - 0112186072 |
| | - | உதவிப் பணிப்பாளர் | - 0112877378 |
| | - | அலுவலகம் | - 0112877374 |



**(திருமதி) இமெல்டா சுகுமார்,**
செயலாளர்.

பிரதிகள்

1. செயலாளர், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு - தங்கள் தயவான கவனத்திற்கு
2. செயலாளர், சுகாதார அமைச்சு - தங்கள் தயவான கவனத்திற்கு
3. கணக்காய்வாளர் - தங்கள் தயவான கவனத்திற்கு
4. பிரதான கணக்காளர், சமூக சேவைகள் அமைச்சு - உரிய நடவடிக்கைக்காக
5. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், சமூக சேவைகள் அமைச்சு - உரிய நடவடிக்கைக்காக
6. அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் - தேவையான. நடவடிக்கையின் பொருட்டு.

இணைப்பு 3

**தீராத சிறுநீரக நோயினால் வருந்தும் (CKD) ரூபா. 3000/- வாழ்வாதாரக் கொடுப்பனவினை வழங்குவதற்குப் பரிந்துரைக்கப்பட்ட நபர்களின் பெயர்ப் பதிவேடு**

**(தீராத சிறுநீரக நோய் தொடர்பான மருத்துவச் சான்றிதழைக் கொண்ட நோயாளர்களுக்கு மாத்திரம்)**

மாவட்டம் - ......................................................

பிரதேச செயலகத் தொகுதி - ................................................

மாதம் - .....................................................

| பிரிவு | நோயாளியின் பெயர் | முகவரி | பிறந்த திகதி | தே.அ.இல. | திருமணமானவர்/ திருமணமாகாதவர் | பெண்/ ஆண் | இரத்தச் சுத்திகரிப்பு ஆரம்பிக்கப்பட்ட காலம் | பிள்ளைகள் தொடர்பான தகவல்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | 5 வயதிற்குக் குறைவான | பாடசாலை செல்வோர் | பிற |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

தயாரித்தவர் -

ஒப்பம் - ..............................................

பரீட்சித்தவர் -
சமூக சேவைகள் உத்தியோகத்தர்/சமூக அபிவிருத்தி உதவியாளர்/
சமூக உத்தியோகத்தர்.

ஒப்பம் - ..........................................

பிரதேச செயலாளரின்

ஒப்பம் -

இணைப்பு 4

**தீராத சிறுநீரக நோயினால் வருந்தும் (CKD) நோயாளிக்கு வாழ்வாதாரக் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்வதற்குப் பிரதிநிதி ஒருவரைப் பெயரிடுகின்ற பதிவேடு (அவராற் சமூகந்தர முடியாத வேளையில்)**

மாவட்டம் - .......................................................

பிரதேச செயலகப் பிரிவு - .................................................

மாதம் - ......................................................

| இலக்கம் | நோயாளியின் பெயர் | முகவரி | தேசிய அடையாள அட்டை இலக்கம் | பிரதிநிதியின் பெயர் | முகவரி | தே.அ. இலக்கம் | கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்ட தினம். |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |
| | | | | | | | |

தயாரித்தவர் - கிராம உத்தியோகத்தர் பிரதேச செயலாளர்

ஒப்பம் - ................................... ஒப்பம் - ................................... ஒப்பம் - ...................................

திகதி - ................................... திகதி - ................................... திகதி - ...................................

சமூக சேவைகள் அமைச்சின் உபயோகத்திற்கு மாத்திரம்

அங்கீகரிக்கின்றேன் - ...................................................

பெயர், பதவி, ஒப்பம் - ............................................... திகதி - ................................

இணைப்பு 5

**தீராத சிறுநீரக நோயினால் வருந்தும் (CKD) நோயாளிக்கு ரூபா. 3000/- வாழ்வாதார உதவியினை வழங்குவதற்குப் பரிந்துரைக்கப்பட்ட நபர்களின் புதிய பிரவேசப் பதிவேடு**

மாவட்டம் - ........................................................

பிரதேச செயலகப் பிரிவு - ..................................................

மாதம் - .......................................................

| இலக்கம் | கொடுப்பனவு நிறுத்தப்பட்ட நோயாளியின் பெயர் | முகவரி | கொடுப்பனவு நிறுத்தப்பட்ட தினம் | அதற்கான காரணம் | புதிதாக உள்ளடக்கப்பட்டவர் | முகவரி | தே.அ. இல. | கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்ட தினம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |
| | | | | | | | | |

தயாரித்தவர் -

பரீட்சித்தவர் -
சமூக சேவைகள் உத்தியோகத்தர்/சமூக அபிவிருத்தி உதவியாளர்/
சமூக உத்தியோகத்தர்.

பிரதேச செயலாளரின்

ஒப்பம் - ..............................................
திகதி - ............................................

ஒப்பம் - ..........................................
திகதி - ............................................

ஒப்பம் - ........................
திகதி - ............................

**சமூக சேவைகள் அமைச்சின் உபயோகத்திற்கு மாத்திரம்**

அங்கீகரிக்கின்றேன் - ....................................................

பெயர், பதவி, ஒப்பம் - ..............................................    திகதி - ................................